CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 7/2021

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : தங்கவேல் | Father's/Husband's Name : வேலாண்டி | |
| Village | : சுந்தரராஜபுரம் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 80 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.08.2025

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் என்னுடைய இடத்தில் பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்வதால் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களை எனது சகோதரர் மாணிக்கம் என்பவரின் மகன் முருகேசன் என்பவரிடமிருந்து வாய்மொழியாக நான் கிரையம் பெற்றிருக்கிறேன் என்று எனது வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி முருகேசனுக்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்று கேட்டால் எங்களுக்கு பூர்வீக பாதிக்கப்பட்ட சொத்து எங்கள் சியான் பாதம் பிரித்து கொடுத்ததில் அவருக்கு கிடைத்தது. தாவா சொத்து முருகேசனுக்கு பாகமாக கிடைத்தது என்பதை காட்டி பத்திரம் ஏதேனும் எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதியிருக்கிறோம். தாவா சொத்திற்கு அரசாங்கத்தால் எங்கள் பேருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்றால் வழங்கப்பட்டுள்ளது.

2) அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்ட சொத்தை நான் வாய்மொழியாக கிரையம் பெற்று இருக்கிறேன் என்று சொல்வது செல்லாது என்றாலும் நான் சொல்வது போல் வாய்மொழியாக கிரையம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் முருகேசனிடம் வாய்மொழியாக கிரையம் பெற்றதை பத்திரம் எழுதி பதிவு செய்ய இதுவரை எந்த முயற்சி செய்தேனா என்றால் என் தம்பி முருகேசன் இறந்துவிட்டார் அவரது மகனை அழைத்தேன். அவர் பத்திரம் பதிவு செய்து கொடுக்க வரவில்லை. முருகேசன் இறந்து 40 வருடங்கள் இருக்கும். நான் தாவா சொத்தை கிரையம் பெற்றதை காட்ட எந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்றதாக சொல்லும் சொத்து குறித்து 40 வருடங்களாக

பட்டா மாற்றம் செய்யவும், வேறு வருவாய் ஆவணங்களில் மாற்றம் செய்யவோ எதுவும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் முயற்சி செய்தேன் எனது தம்பி மகன் ஒத்துழைக்கவில்லை.

3) 1ம் பிரதிவாதி மாணிக்கத்தை எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி தாத்தாவான மாணிக்கம் பெயரில் தான் இன்று வரை உள்ளது என்றாலும் நான் முருகேசனிடம் வாய் மொழியாக கிரையம் பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. தாவா சொத்து எங்களது அனுபவத்தில் இருப்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு நான் தான் அவர்களுக்கு இடைஞ்சல் செய்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்தை அளக்க முயற்சி செய்தேனா என்றால் முயற்சி செய்தேன், ஆனால் பிரதிவாதிகளை அளக்கவிடவில்லை.

4) தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் நான் தான் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எத்தனை வருடங்களாக எனது அனுபவத்தில் இருக்கிறது என்று கேட்டால் 70 வருடங்களுக்கு மேலாக என் அனுபவத்தில் இருக்கிறது. தாவா சொத்து குறித்து காவல் நிலையத்தில் ஏதும் புகார் கொடுத்தோமா என்றால் ராஜதானி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக் கொள்ள சொல்லிட்டனர். நான் முருகேசனிடம் கிரையம் பெறவில்லை என்பதால் தான் அவரது மகன் இந்த வழக்கில் எனக்கு ஆதரவாக சாட்சியும் அளிக்கவோ அல்லது தாவா சொத்து குறித்து எனது பெயரில் கிரையம் பத்திரம் எழுதி கொடுக்கவும் வர மறுக்கிறார் என்று சொன்னால் சரியல்ல.

5) இந்த வழக்கில் முருகேசனின் மகனை சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறோமா என்றால் தேவைப்பட்டால் விசாரிக்க தயாராக இருக்கிறேன். எந்த காலத்திலும் தாவா சொத்து தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றாலும் தாவா சொத்தின் அனுபவத்தில் நான் எப்போதும் இருந்ததில்லை என்றாலும் சரியல்ல.நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 22.08.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2025.08.22 15:02:29 +0530

District Munsif,
Aundipatti.